மோட்டார் வாகன விபத்து வழக்குகள் சிறப்பு சார்பு நீதிமன்றம் எண் – 2, திருவள்ளூர்.

MCOP. No. 4/2023 தேதி – 04.02.2025

**ம.சா.1 –** பானுமதி

**2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை –**

விபத்தில் எனக்கு வலது கால் முறிவு ஏற்பட்டது. தோள் பட்டை மற்றும் முதுகில் காயம் ஏற்பட்டது. விபத்து சமயத்தில் நான் ஸ்கூட்டி மேக்ஸி இருசக்கர வாகனத்தில் என்னுடைய கணவர் ஓட்ட நான் பின்புறமாக அமர்ந்து சென்றேன். விபத்தில் என்னுடைய கணவருக்கு முட்டிக்கு கீழ் அடிப்பட்டது. அவர் எதுவும் வழக்கு தாக்கல் செய்யவில்லை.

விபத்தை பற்றி அந்த ஊரில் உள்ளவர் புகார் கொடுத்தார்கள். யார் என்று எனக்கு தெரியாது. அடிப்பட்டவுடன் நான் திருவள்ளூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்ந்து அங்கு 15 நாட்கள் சிகிச்சை பெற்றேன். அதன் பிறகு 2வது முறையாக திருவள்ளூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுக் கொண்டேன். மருத்துவ சிகிச்சை அனைத்தும் அரசு மருத்துவமனையில் பெற்றுகொண்டேன்.

அனைத்து அறுவை சிகிச்சைகளும் செய்து மருத்துவமனையில் இருந்து இறுதியாக எப்போது விடுவிக்கப்பட்டேன் என்றால் எனக்கு தெரியாது. 2021 வருடம் நவம்பர் மாதம் விபத்து நடைபெற்றது. தேதி ஞாபகம் இல்லை. விபத்திற்கு மொத்தம் 3 மாதங்கள் 15 நாட்கள் கணக்கில் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று விடுவிக்கப்பட்டு தோராயமாக பிப்ரவரி மாதத்தில் விடுவிக்கப்பட்டேன்.

அங்கு மருந்து மாத்திரை, அறுவை சிகிச்சை இலவசமாக தான் செய்யப்பட்டது. நான் மனுவில் மருத்துவ செலவாக எவ்வளவு கேட்டேன் என்று எனக்கு தெரியாது. தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுக் கொண்டதற்காக மருத்துவ செலவான ரூ.60,000/– க்கான மருத்துவ இரசீது தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்த மனு 2023 ல் தாக்கல் செய்யப்பட்டது.

என்னுடை மனுவில் தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுக் கொண்டதை பற்றி கூறவில்லை. இரசீது நம்பர் 377 க்கு ரூ.4,918/– , இரசீது நம்பர் 412 க்கு ரூ.900/–, இரசீது நம்பர் 424 க்கு 7,450/– ஆகிய இரசீதுகள் நான் மருந்துக் கடைக்கு சென்று வாங்கியதாக தான் உள்ளது என்றும், மருத்துவ சீட்டு மற்றும் பரிந்துரையின் அடிப்படையில் வாங்கவில்லை என்றால் சரியல்ல.

மணவாளநகரில் உள்ள ஒரு தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றேன். மருத்துவரின் பெயர் எனக்கு ஞாபகம் இல்லை. நான் மாணிக் மருத்துவரிடம் சிகிச்சைக்காக சென்றதற்கான மருத்துவ சீட்டு பரிந்துரை தாக்கல் செய்யவில்லை என்று அவரிடம் தான்

சிகிச்சை பெற்றேன். அவர் என்னை பரிசோதித்த மருத்துவ ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

செந்தில் பார்மெஸில் மருந்து வாங்கியதற்கான மருத்துவ பரிந்துரைகள் தாக்கல் செய்யவில்லை. இதில் வாக்கர் பெட் வாங்கவில்லை. மருத்துவ சீட்டுகள் 565 வாக்கர் பெட், இரசீது எண் 377 வாட்டர் பெட் வாங்கவில்லை என்றால் சரியல்ல. மாணிக் மருத்துவரின் இரசீகள் மருத்துவ பரிந்துரையுடன் தாக்கல் செய்யவில்லை என்றும், வழக்கிற்காக தயாரிக்கப்பட்டது என்றும், இது ஏற்றுக் கொள்ளக்கூடியது என்றாலும் சரியல்ல.

மாணிக் மருத்துவமனையில் சிகிச்சைக்கு சென்றால் அங்கு உள்ள மருத்துவமனையில் மருந்துக் கடையில் தான் மருந்து எழுதி கொடுப்பார்கள் என்றும், வெளி மருந்து கடைகளில் எழுதி கொடுக்கமாட்டார்கள் என்றாலும் சரியல்ல. நான் தாக்கல் செய்த மருத்து இரசீகள் அனைத்தும் மருத்துவ பரிந்துரையுன் தாக்கல் செய்யப்படாததால் அந்த மருத்துவ இரசீகள் ஏற்றுக் கொள்ளக்கூடியது அல்ல என்றால் சரியல்ல.

தற்போது நான் வேலைக்கு செல்லவில்லை. நான் தொழிலாளர் நல துறை வாரியத்தில் இனிமேல் நான் வேலைக்கு செல்லமாட்டேன் என்று பணி ஒப்படைத்தேனா என்றால் இல்லை. எவ்வளவு நஷ்ட ஈடு கேட்டேன் என்று எனக்கு தெரியவில்லை. நான் கேட்டுள்ள நஷ்ட ஈடு அதிகம் என்றால் சரியல்ல.

விபத்து ஏற்படுத்திய வாகனத்திற்கு செல்லும் படியாகும் காப்பீடு இல்லை என்றாலும், ஓட்டுநருக்கு ஓட்டுநர் உரிமம் இல்லாததால் 2ம் எதிர் மனுதாரரை பொறுத்து இந்த மனு தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல. விபத்து சமயத்தில் என்னுடைய கணவருக்கு ஓட்டுநர் உரிமம் இல்லை என்றால் சரியல்ல.

**<u>மறு விசாரணை</u>** – இல்லை.

ஓம்.பானுமதி

Typed to my dictation and correction by me in open Court read over to the witness and admitted by him / her to be correct.

S/d. P. Deenadayalan.
Subordinate Judge,
Special Sub Court for MCOP Cases,
Tiruvallur,